இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 06-07-2023

# ரஃபேலைத் தொடர்ந்து டிரோன்!

**பா**.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகளின் அணிச்சேர்க்கையை ஊழல் கட்சிகளின் அணிச்சேர்க்கையாக அடையாளப்படுத்தி இருக்கிறார் பிரதமர் மோடி. அதையே உள்துறை அமைச்சரும் சொல்லி இருக்கிறார்கள். இவர்கள் இதனை உரக்கச் சொல்லும் இதே நேரத்தில்தான் மிகப்பெரிய ஊழல் ஒன்று நடந்திருப்பதை காங்கிரஸ் கட்சி அம்பலப் படுத்தி இருக்கிறது. அமெரிக்காவில் இருந்து வாங்கப்படும் ரூ.25 ஆயிரம் கோடி டிரோன் பேரத்தில் முறைகேடு நடந்திருப்பதாக காங்கிரஸ் கட்சி சொல்லி இருக்கிறது. மற்ற நாடுகளை விட நான்கு மடங்கு அதிக விலையில் பா.ஜ.க. அரசு வாங்கி இருப்பதாக காங்கிரஸ் கட்சி சொல்லி இருக்கிறது. இதுபற்றி ஊடகங்கள் விரிவான தகவல்களைச் சொல்லத் தொடங்கி உள்ளன.

“அமெரிக்காவிடம் இருந்து ரூ.25,000 கோடி மதிப்பில் இந்தியா வாங்கும் 31 பிரிடேட்டர் டிரோன்கள் பேரத்தில் முறைகேடு நடந்திருப்பதாகவும், மற்ற நாடுகளைவிட இந்தியா 4 மடங்கு அதிக விலை கொடுத்து வாங்குவதாகவும்” இவை எழுதத் தொடங்கி இருக்கின்றன. அமெரிக்காவில் உள்ள ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து 31 எம்க்யூ-9பி பிரிடேட்டர் யு.ஏ.வி. டிரோன்களை வாங்க சமீபத்தில் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் வழங்கியது. அதிக உயரத்திலும், நீண்ட தொலைவிலும் பறந்து எதிரிகளின் இலக்குகளை தாக்கி அழிக்கும் இந்த டிரோன்கள் அதிநவீனமானவை என பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. பிரதமர் மோடியின் சமீபத்திய அமெரிக்க பயணத்தில் அதிபர் பைடனுடனான சந்திப்பில், இந்த டிரோன்கள் வாங்குவது உறுதி செய்யப்பட்டது.

இதற்கான விலை 3,072 மில்லியன் டாலர், அதாவது ரூ.25,200 கோடி என அமெரிக்க அரசு நிர்ணயித்துள்ளது. இந்த டிரோன்களின் தொழில்நுட்ப அம்சங்கள், உற்பத்தி குறித்த கொள்கை அனுமதி அமெரிக்க அரசிடம் இருந்து பெறப்பட்ட பிறகு விலை குறித்து பேசி இறுதி முடிவு எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சகம் கூறி உள்ளது. ஆனாலும், தற்போது வரை ரூ.25 ஆயிரம் கோடி மதிப்பிலான பிரிடேட்டர் டிரோன்களை வாங்கப் போவதாகவே ஒன்றிய அரசு அதன் அறிக்கைகளில் கூறி வருகிறது.

இந்தியா மற்ற நாடுகளைக் காட்டிலும் 4 மடங்கு அதிக விலை கொடுத்து வாங்கப் போவதாக காங்கிரஸ் பரபரப்பு குற்றச்சாட்டு சுமத்தி உள்ளது. காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பவன் கேரா இதனை அம்பலப்படுத்தி இருக்கிறார்.

**“தேச பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. ஆனால், பிரிடேட்டர் டிரோன்கள் ஒப்பந்தம் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. இதில், ஒன்றிய பா.ஜ. அரசு தேச நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக சந்தேகிக்கப் படுகிறது. முன்பு, பிரான்சிடம் இருந்து 126 ரபேல் போர் விமானங்களை வாங்குவதற்குப் பதிலாக 36 ரபேல் விமானங்களை மட்டுமே பா.ஜ. அரசு வாங்கியது. அதை நாம் அனைவரும் பார்த்தோம். ரபேல் விமானத்தின் தொழில்நுட்பங்கள் உள்நாட்டின் எச்.ஏ.எல். நிறுவனத்திற்கு மறுக்கப்பட்டதையும் பார்த்தோம். அப்போது, பாதுகாப்பு கையகப்படுத்துதல் குழு மற்றும் ஆயுதப்படைகளின் பரவலான ஆட்சேபனைகள் இருந்த போதிலும், பிரதமர் மோடி நேரடியாக ஒருதலைப்பட்சமான முடிவுகளை எடுத்து ஒப்பந்தத்தை இறுதி செய்தார். ரபேல் ஊழல் இன்னும் பிரான்சில் விசாரிக்கப்பட்டு வருகிறது.**

இந்த நிலையில் அமெரிக்காவிடம் இருந்து பிரிடேட்டர் டிரோன்களை வாங்குவதிலும் இதே போன்ற விவகாரங்கள் நடப்பதால் முழுமையான வெளிப்படைத்தன்மையை நாங்கள் கோருகிறோம். முக்கியமான கேள்விகளுக்கு அரசு பதில் தர வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் ஒரு ஊழல் நடக்க வழிவகுக்கப்படும். இதைப் பற்றி பாதுகாப்பு அமைச்சகம் தெளிவுபடுத்த வேண்டும். தற்போதைய நிலவரப்படி, பிரிடேட்டர் டிரோன் ஒவ்வொன்றின் விலை தோராயமாக ரூ.812 கோடி. 31 டிரோன்கள் வாங்க ரூ.25,200 கோடியை இந்தியா செலவழிக்க வேண்டும். இது, மற்ற நாடுகள் இதே டிரோன்கள் வாங்கியதை விட 4 மடங்கு அதிகமாகும்.

**இந்தியா ஏன் அதிக விலை கொடுத்து டிரோன்களை வாங்குகிறது? அதுவும், செயற்கை தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு இல்லாத டிரோனுக்கு நாம் ஏன் அதிக விலை தர வேண்டும். விண்ணை முட்டும் இந்த விலையுடன் டிரோன்களை வாங்க வேண்டிய அவசரம்தான் என்ன? இந்திய ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ.) இதே டிரோனை இந்த தொகையில் 1020 சதவீதத்தில் உருவாக்க முடியும்.**

ஸ்தம், கதக் ரக டிரோன்களை உருவாக்க டி.ஆர்.டி.ஓ.வுக்கு ரூ.1786 கோடியை ஒதுக்கிவிட்டு, அமெரிக்காவிடம் ரூ.25,000 கோடி கொடுத்து டிரோன்களை வாங்குவது ஏன்? பிரிடேட்டர் டிரோன் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்க பாதுகாப்புக்கான அமைச்சரவை குழுவை ஏன் கூட்டவில்லை? இவை அனைத்தும் இந்த பேரத்தில் முறைகேடு நடப்பதற்கான சந்தேகங்களை வலுவாக்குகின்றன” என்று அவர் கூறி உள்ளார். ஏற்கனவே, திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் சாகேத் கோகலே இதே விவகாரம் பற்றி கேள்விகளை எழுப்பி இருந்தார். இதற்கெல்லாம் இதுவரை எந்த பதிலும் இல்லை.

**பொது சிவில் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லி நாட்டை திசை திருப்புவது இந்த டிரோன் விவகாரங்களை மறைக்கத் தானா? மணிப்பூர் எரியட்டும் என்று இருப்பதும் இதனை மறைக்கத் தானா?**

## தமிழகத்தில் மழை!

*சென்னை, ஜூலை 6 -*

*06.07.2023:* தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

*07.07.2023 முதல் 09.07.2023 வரை:* தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ள உள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழா நடைபெறும் மதுரை ஆயுதப்படை மைதானத்தில் விழாமேடை அமைப்பது குறித்து முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வ.வேலுசாமி மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

### ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சருடன் சந்திப்பு!

# காவிரியில் தண்ணீரை திறந்து விட நடவடிக்கை எடுப்பதாக உறுதி!

## புதுடெல்லியில் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

புதுடெல்லி, ஜூலை 6-

தமிழ்நாடு நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை நேற்று பிற்பகல் சந்தித்துப் பேசினார். அப்போது அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காவிரியில் ஜுன் மாதத்திற்கான தண்ணீரை முறையாக திறந்துவிட கர்நாடக அரசுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரை வலியுறுத்தியதாக செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார். மேலும் கர்நாடகா மேக தாது அணை கட்ட ஒருபோதும் தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என்றும் உறுதிபடக் கூறினார்.



மேகதாது விவகாரம் தொடர்பாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாட்டுக்கு ஜூன் மாதத்துக்கான தண்ணீரை கர்நாடக அரசு திறக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு உச்சநீதி மன்ற உத்தரவுப்படி ஜூன் மாதம் 9.19 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்குத் திறக்கப்பட வேண்டும். ஆனால், 2.83 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு ஜூன் மாதத்திற்கான 6.357 டி.எம்.சி. தண்ணீரை இன்னும் கர்நாடகா தரவேண்டியுள்ளது.

காவிரியிலிருந்து ஜூலையில் 31.24 டி.எம்.சி.யும், ஆகஸ்டில் 45.95 டி.எம்.சி. யும் கர்நாடகா தர வேண்டும். ஜூன், ஜூலை மாதங்களுக்கான தண்ணீரை பெற்றுத்தந்தால் மட்டுமே குறுவை சாகுபடி செய்யமுடியும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 160 கன அடியாக இருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்குமா என டெல்டா விவசாயிகள் தவிக்கின்றனர்.

தமிழ்நாடு அரசுடன் கர்நாடகம் பேசினால், காவிரியில் ஏன் தடுப்பணை கூடாது என்பதை காரணத்தோடு விளக்குவோம். மேகதாது அணை குறித்து காவிரி மேலாண்மை ஆணையம், ஜல்சக்தி அமைச்சகத்துடன் பேசக்கூடாது என்று நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

**கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரை!**

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை, அவரது இல்லத்தில் நேற்று பிற்பகல் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சந்தித்துப் பேசினார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் துரைமுருகன்,

காவிரியில் கடந்த ஜூன் மாதம் தர வேண்டிய தண்ணீரில் 6 டி.எம்.சி. குறைவாக உள்ளதாகவும், அந்த தண்ணீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறும் ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை கேட்டுக் கொண்டதாகவும் கூறினார்.

மேலும், இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள நதிநீர் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய அதிகாரம் காவேரி மேலாண்மை வாரியத்திற்குத்தான் உண்டு என்பதால், இது தொடர்பாக கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரை வழங்க வேண்டும் என ஒன்றிய அமைச்சரிடம் வலியுறுத்தியதாகவும் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் துரைமுருகன் கூறுகையில் தமிழ்நாட்டிற்கு 12.21 டி.எம்.சி. தண்ணீரை தர வேண்டும். அதனைப் பெற தமிழ்நாட்டிற்கு உரிமை உண்டு. 299 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமே திறந்துவிட்டுள்ளது.

கர்நாடகா காவிரியில் தண்ணீரை திறக்கவில்லை என்றால் டெல்டா பயிர்கள் கருகும் நிலை ஏற்படும் காவிரியில் தண்ணீரை திறக்க காவிரி மேலாண்மை வாரியம் தான் உத்தரவிட வேண்டும்.

காவிரியில் தண்ணீரை திறந்துவிட கர்நாடகாவை வலியுறுத்த வேண்டும் என்று ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்ததும், அக்கோரிக்கைகளை ஏற்று காவிரியில் தண்ணீரை தமிழ்நாட்டிற்கு திறந்துவிட அறிவுறுத்துவேன் என்று ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் உறுதியளித்தார். மேகதாது அணையை கட்ட தமிழ்நாடு ஒரு போதும் அனுமதிக்காது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பேட்டியளிக்கையில் கூறினார்.

அதுபோது, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் மற்றும் தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா ஆகியோர் உடன் இருந்தனர்.

### மாநில அளவிலான பள்ளி மாணவர்களுக்கான கையுந்து பந்து போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகளுக்கு

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரிசு வழங்கினார்!

*சென்னை, ஜூலை 6 -*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (04.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாநில அளவிலான பள்ளி மாணவியர்களுக்கான கையுந்து பந்து போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற அணிகளுக்கு மொத்தம் ரூபாய்.13.50 இலட்சம் பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை வழங்கினார்.*

*முதலமைச்சர் கோப்பை - 2023 மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் 17 இடங்களில் ஜூலை 01ந் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இந்தப்போட்டிகள் ஜூலை மாதம் 25-ந்தேதி வரை நடைபெறவுள்ளது.*

*சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கான கையுந்து பந்து போட்டிகள் ஜூலை 1 - முதல் தொடங்கி இன்று வரை நடைபெற்றது. நாக் அவுட் மற்றும் லீக் முறையில் நடைபெற்ற இப்போட்டியில் 38 - மாவட்டங்களை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. நேற்று முன்தினம் (04.07.2023) நடைபெற்ற கையுந்து பந்து பெண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, மற்றும் சென்னை அணிகள் விளையாடின. இதில் சேலம் அணி முதல் இடத்தையும், சென்னை அணி இரண்டாம் இடத்தையும், ஈரோடு அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (04.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாநில அளவிலான பெண்கள் பிரிவு கையுந்து பந்து போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற அணிகளுக்கு மொத்தம் ரூபாய்.13.50 இலட்சம் பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை வழங்கினார்.*

*மேலும் அமைச்சர் அவர்கள், நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான கையுந்து பந்து போட்டியினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.*

*பின்னர் சிற்றுண்டி மற்றும் உணவு பரிமாறும் கூடத்தினை பார்வையிட்டு மாணவ - மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவின் தரம் குறித்து ஆய்வு செய்து உணவினை ருசித்தார்.*

*இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. ஆகியோர் உடனிருந்தனர்.*

*பின்னர் நேற்று முன்தினம் (04.07.2023) நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான கையுந்து பந்து இறுதிப் போட்டியில் சென்னை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்ட அணிகள் நாக் அவுட் மற்றும் லீக் முறையில் விளையாடின. இந்தப் போட்டியில் சென்னை அணி முதல் இடத்தையும், கோயம்புத்தூர் அணி இரண்டாம் இடத்தையும், திருநெல்வேலி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன. வெற்றி பெற்ற அணி மற்றும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் வழங்கினார்கள்.*

*இந்தப் போட்டிகளில் முதல் இடம் பெறுகின்ற அணியை சேர்ந்த 12 வீராங்கனைகளுக்கு தலா ரூபாய். 50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபாய்.6.00 இலட்சம், இரண்டாம் இடம் பெறுகின்ற அணியை சேர்ந்த 12 வீராங்கனைகளுக்கு தலா ரூபாய் .37,500 வீதம் ரூபாய்.4.50 இலட்சம் மற்றும் மூன்றாம் இடம் பெறுகின்ற அணியை சேர்ந்த 12 வீராங்கனைகளுக்கு தலா ரூபாய்.25 ஆயிரம் வீதம் ரூபாய். 3 இலட்சம் ஆக மொத்தம் ரூபாய்.13.50 இலட்சம் வழங்கப்படுகிறது.*

## நாகாலாந்தில் நிலச்சரிவு:

*கோஹிமா, ஜூலை 6 -*

*நாகாலாந்தில் திமாபூர் மற்றும் கோஹிமா இடையே சுமோகெடிமா மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 29ல் நேற்று மாலை ஏற்பட்ட நிலச்சரிவில் பெரிய பாறைகள் மலையில் இருந்து உருண்டு கார்கள் மீது விழுந்தது. இதில் இரண்டு கார்கள் முற்றிலுமாக நொறுங்கியதில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர். பலியானவர்களின் அடையாளம் காணப்பட்டு வருகிறது.*

*ராட்சத பாறாங்கல் உருண்டு விழுந்து கார்கள் நசுங்கி சிதறிய வீடியோ பார்ப்பவர்களை பதைபதைக்க வைக்கச் செய்துள்ளது. இதுகுறித்து நாகாலாந்து முதல்வர் நெய்பியு பிரோ தனது டுவிட்டர் பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ளார்.*



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (04.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாநில அளவிலான பள்ளி மாணவியர்களுக்கான கையுந்து பந்து போட்டிகளில் முதலிடம் பெற்ற சேலம் அணிக்கு பரிசுத் தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுக் கோப்பைகளை வழங்கினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. ஆகியோர் உடனுள்ளனர்.